**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 124/2023</u>**
**<u>நாள் 05/11/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – உலகநாதன் (RW1) | த/பெயர் – வீராசாமி |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

<u>முதல் விசாரணை–</u>

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. நடந்த விபத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தொியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து காலகட்டத்தில் AP 39 KW 4994 என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றதால் தான் விபத்து எற்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. மேற்படி சங்கதி சம்மந்தமாக யாரையாவது விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் விசாரணை அதிகாரி விசாரித்துள்ளார். AP 39 KW 4994 என்ற வாகனத்திற்கு விபத்து சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு இருந்ததால் எங்கள் நிறுவனம் தான் காப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றால் என்பதை நிரூபிக்கும் வகையில் சாட்சியமோ, ஆவணமோ தாக்கல் செய்யப்படாத பட்சத்தில் Contributory negligence வராது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**